O.S.No. 65/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:11.02.2026

P.W.1: ராமகிருஷ்ணன் த/பெ– சின்னமாரய்ய நாயக்கர்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) தபசில் சொத்து வாதி சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை, 300 ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் முன்னோர்கள் தோண்டிய கிணறு ஆகும். தபசில் சொத்திற்கான செட்டில்மெண்ட் ஆவணத்தை பார்த்தால் தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியும் என்றால் சரிதான். பிராதுடன் தாக்கல் செய்துள்ள செட்டில்மெண்ட் ஆவண நகலில் தாவா சொத்து முனிசிபல் நாயக்கமார் தெரு கிணறு என உள்ளது என்றால் சரிதான். பிராதுடன் தாக்கல் செய்துள்ள விருதுநகர் நகராட்சிக்குரிய டவுண் சர்வே ரிஜிஸ்டரில் தாவா சொத்து சர்க்கார் புறம்போக்கு நத்தம் முனிசிபல் கிணறு காலியிடம் தூர்ந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். டவுண் சர்வே ரிஜிஸ்டர் 16.07.2018 ல் வழங்கப்பட்டது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் ஆவணம் 30.07.2018 ல் வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

2) தபசில் சொத்தை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்ததாக விருதுநகர் நகராட்சியால் 30.08.2018 ம் தேதி வா.சா.ஆ.4 அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பாகவே தபசில் சொத்து விருதுநகர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட தூர்ந்த கிணறு மற்றும் காலியிடம் என்று தெரியும் என்றால் சரிதான், நகராட்சியின் அனுமதியுடன் கட்டிடம் கட்டி ரசீது வாங்கினோம். தபசில் சொத்தை எங்கள் சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்து விருதுநகர் நகராட்சி எந்த காலத்திலும்

ஒப்புதல் கொடுக்கவில்லை என்றால் சட்டகாலத்திற்கு மேலாக நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம்.

3) வா.சா.ஆ.4 அறிவிப்பிற்கு எங்கள் சங்கம் கொடுத்த பதில் அறிவிப்பு வா.சா.ஆ.7 ல் தபசில் சொத்து சம்மந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்ய கால அவகாசம் கேட்டுள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்தில் நகராட்சி அலுவலக மேல்நடவடிக்கையினை நிறுத்தி வைக்குமாறும், ஆவணங்கள் தாக்கல் செய்ய கால அவகாசம் கேட்டு அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் வாதி சங்கம் சார்பாக இணை இயக்குநர், மத்திய நில அலுவலகத்திற்கு அனுப்பிய மனுவில் ஆவணங்கள் வழங்க கேட்டுள்ளோம் என்றால் சரிதான். 28.01.2019 ம் தேதி வாதி சங்கத்தின் சார்பாக ஆணையர் அவர்கள் ஆவண காப்பகம், சென்னை அவர்களுக்கு அனுப்பிய வா.சா.ஆ.11 ஆவணத்தில் பழைய நகர அளவை எண்.226 பி-க்கான UDR க்கு முந்தைய சிட்டா நகல் வழங்க கேட்டுள்ளோம் என்றால் சரிதான். 29.01.2019 ம் தேதி வாதி சங்கத்தின் சார்பாக விருதுநகர் நகராட்சிக்கு வழங்கிய கடிதம் வா.சா.ஆ.12 ல் தபசில் சொத்திற்கான ஆவணங்களை ஒவ்வொரு அலுவலகத்திலும் கேட்டு விண்ணப்பம் செய்துள்ளதாகவும், அதனால் கால அவகாசம் கேட்டு நாங்கள் மனு கொடுத்தோம் என்றால் சரிதான்.

4) வாதி சங்கத்தின் சார்பாக தபசில் சொத்திற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய கால அவகாசம் கேட்டு வா.சா.ஆ.13 மனு கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.10 ஆகிய ஆவணங்கள் விருதுநகர் நகராட்சி வாதி சங்கத்திற்கு வழங்கிய அறிவிப்பிற்கு முன்பாகவே தபசில் சொத்தானது விருதுநகர் நகராட்சிக்கு பாத்தியப்பட்டது என்று நன்கு தெரியும் என்றால் சரியல்ல. தபசில் சொத்தானது 100

வருடங்களுக்கு மேலாக விருதுநகர் நகராட்சியால் பொதுமக்களின் தேவைக்காக பயன்படுத்தி வந்த நகராட்சிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தபசில் சொத்து விருதுநகர் நகராட்சிக்கு பாத்தியப்பட்டது என்றும், வழக்கிற்காக தபசில் சொத்து 300 ஆண்டு காலமாக வாதி சங்கத்தின் முன்னோர்கள் பயன்படுத்தி வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி வாதி சங்கம் 2014ம் வருடம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 தீர்வை ரசீதுகள் 2018- 2019 வருடத்திற்குரியது என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் நாயக்கமார் பொது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 தீர்வை ரசீது தபசில் சொத்திற்குரியது இல்லை என்றால் சரியல்ல. வாதியின் சங்கத்தின் பெயரில் வா.சா.ஆ.3 தீர்வை ரசீதுகள் இல்லை என்றால் சரிதான், நாயக்கமார் பொது என உள்ளது. விருதுநகர் நகராட்சி அலுவலக ஊழியர்களை ஏமாற்றி மோசடி செய்து வா.சா.ஆ.3 ஆவணத்தை உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்திற்கான மூல ஆவணமான பட்டா மற்றும் பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தபசில் சொத்திற்கு பட்டா இல்லை, அனுபவ பாத்தியத்தில் உள்ளது. தபசில் சொத்து UDR காலத்திற்கு முன்பாகவே முனிசிபல் காலியிடம் துார்ந்த கிணறு என உள்ளது என்றால் சரியல்ல. தபசில் சொத்தை ஆக்கிரமிப்பு செய்து வாதி சங்கத்தால் கடைகள், கட்டிடங்கள் கட்டியுள்ளது சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல.

6) 2014ம் வருடத்திற்கு பின்னர் தபசில் சொத்தை ஆக்கிரமித்து கட்டிடங்கள் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. தபசில் சொத்தை நானும், எனது முன்னோர்களும் 300 ஆண்டு காலமாக அனுபவம் செய்தது

கிடையாது என்றால் சரியல்ல. தபசில் சொத்திற்குரிய உரிமை மூல ஆவணங்களை தாக்கல் செய்யாமல் நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தபசில் சொத்தை அனுபவம் செய்வதற்கு விருதுநகர் நகராட்சி எந்த காலத்திலும் எனக்கு அனுமதி வழங்கவில்லை என்றால் சரியல்ல. பிராதுடன் தாக்கல் செய்துள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை பார்வையிட்டால் தாவா சொத்து விருதுநகர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று தெரியும் என்றால் சரியல்ல. விருதுநகர் நகராட்சியால் ஆக்கிரமிப்பை அகற்ற சட்டபடி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை காலம் கடத்தும் நோக்கில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்களது அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்று விருதுநகர் நகராட்சிக்கு எதிராக விருதுநகர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.39/2019 வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

7) அசல் வழக்கு எண்.39/2019 வழக்கை மேல் நடத்தவில்லை என்பதால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனால் இவ்வழக்கில் நான் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தபசில் சொத்தின் எங்களுக்கு உரிமை மூலம் இல்லை என்பதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)